# வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் மேம்பாட்டில் ஒழுக்கம் சார் விழுமியங்களின் பங்களிப்பு
# (இடைநிலைப் பிரிவு மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**Ms. Balasundaram Soba**
Department of Education and Child Care, Eastern University of Sri Lanka
(balasundramsobana@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*மனித விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் கல்வியின் பங்கு எந்தளவிற்கு முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றதோ, அந்தளவிற்குக் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் மேம்மையடைய ஒழுக்கம் சார் விழுமியங்களின் பங்களிப்பு இன்றியமையாததாகவுள்ளது. கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் சிறப்படைவதற்கு ஒழுக்கம் சார் விழுமியங்கள் எந்தளவிற்கு பங்களிப்புச் செய்கின்றது என்பதைக் கண்டறியும் பொருட்டு* ***யுத்தத்தினால் இடம் பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்ட மண்முனை தென்மேற்குப் பிரதேசம்*** *ஆய்வுப் பிரதேமாக தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட மாணவர்கள் இடம் பெயர்வினால் குறிப்பிட்ட காலங்களில் கல்வியைத் தொடர முடியாமல் முகாம்களில் தங்கியிருந்த காலப்பகுதியில் மாணவர்களிடத்தே வன்முறைகள், திருட்டு, பொய் கூறல் போன்றவாறான தீய நடத்தைகள் உருவானதோடு, இன்றும் காணக்கூடியதாகவுள்ளது. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலை மாணவர்களிடத்தே ஒழுக்கம் சார் விழுமியப் பண்புகள் எவ்வாறுள்ளது? மாணவர்களிடையே விழுமியப் பண்புகள் குறைவாகக் காணப்படுவதற்கான காரணங்கள், விழுமியப் பண்புள்ள மாணவர்கள் வகுப்பறையில் காணப்படும் போது எந்தளவிற்குக் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் வெற்றியளிக்கின்றது, விழுமியப் பண்புகள் இல்லாத நிலையில் மாணவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் போன்றவற்றை அறிந்து இவற்றுக்கான தீர்வுகளை முன்வைக்கும் முகமாக இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. பிரச்சினைகளை ஆய்வு செய்தல், மாணவர்களின் இயல்புகள், நடத்தை (Behavior) ஆகிய செயற்பாடுகளை விளக்குவதோடு, தரவுப்பகுப்பாய்வு முறையாக அதிகளவு பண்பறிசார் முறை பயன்படுத்தப்பட்டுள்ளமையினால் இவ்வாய்வானது விபரண ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ૧૨ பாடசாலைகள் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து வினாக் கொத்து, நேர்காணல், அவதானம் போன்றவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் சார்பாக தீர்வாலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.*

***கலைச் சொற்கள்:*** *ஒழுக்கம் சார் விழுமியப் பண்புகள், நெறிபிறழ்வான நடத்தைகள், கற்றல் கற்பித்தற் செயற்பாடு, மேம்பாடு.*

## அறிமுகம்

### ஆய்வு அறிமுகம்

தற்காலத்தில் கல்விச் செயற்பாடுகளில் அறிவுக்கும், திறன் விருத்திக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் நடத்தை மற்றும் ஒழுக்கம் சார்ந்த விடயங்களில் இல்லாதுள்ளமையினால் மாணவர்களிடத்தே விழுமியப் பண்புகள் இல்லாமல் மறைந்து கொண்டு செல்கின்றன.

மண்முனை தென்மேற்குக் கோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் நாளாந்த நடவடிக்கைகளை அவதானிக்கும் பொழுது பெரும்பாலானோர் வன் செயல்களில் ஈடுபடுபவர்களாகவும், பாடசாலைப் பொருட்களுக்கு சேதம் விளைவிக்கும் வகையிலும் செயற்படுகின்றனர். இதனால் பாடசாலைக்கு ஒழுங்காக சமூகமளிக்காமை, வகுப்புக்கு காலம் தாமதித்து வருதல், பரீட்சை நாட்களில் வராது விடுதல், பரீட்சையில் பார்த்தெழுதுதல், ஒப்படைகள், செயற்றிட்டங்கள் ஆகியவற்றை வரையறுக்கப்பட்ட கால எல்லைக்குள் சமர்ப்பிக்காமை, போன்ற பல்வேறு பண்புகள் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை சிறப்பாக மேற்கொள்ள முடியாதவாறு பாதிக்கின்றன.

இதனால் பிரதான பாடங்களை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினூடாக மாத்திரமன்றி, இணைபாடக் கற்றல் கற்பித்தல் ஊடாகவும் மாணவர்களிடத்தே அழிவடைந்துள்ள ஒழுக்கம் சார் விழுமியப் பண்புகளை மேன்படுத்தல் அவசியமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறே இப்பாடசாலை மாணவர்கள் ஏனையவர்களுடன் உரையாடும் போது ஆசிரியர்கள், சக மாணவர்கள் மற்றும் மூத்தோர்களுடன் பேசும் பொழுது மொழியைக் கையாளும் விதம், பாடசாலையிலும், பாடசாலைக்கு வெளியிலும் நடந்து கொள்ளும்

முறை போன்றவை பாடசாலைக் கட்டுப்பாடு, பாடசாலையின் எதிர்பார்ப்பு, சமூக ஒழுங்கு, சமூக எதிர்பார்ப்பு என்பனவற்றை மீறியதாக உள்ளன. இவை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பின்னணி**

பெரும்பாலான மாணவர்கள் ஒழுக்கம் சார் விழுமியப் பண்புகளை பின்பற்றாத நிலையில் கற்றலில் ஆர்வமின்றிக் காணப்படுவதோடு, தீய செயல்களிலும் ஈடுபடல், சில மாணவர்கள் வன்முறை நாட்டமுள்ளவர்களாகச் செயற்படுவதோடு, பாடசாலைக்குச் தொடர்ச்சியாக வருகை தராதவர்களாகவும் காணப்படல், மாணவர்கள் கற்பதற்கு ஆயத்தமாக வருகை தராமையும், கற்றலில் ஆர்வமின்றிக் காணப்படலும் போன்ற பல பின்னணிகளின் அடிப்படையில் இவ்வாய்வுத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வுக்கான நியாயம்**

இன்று கல்வியானது விற்பனைப் பொருளாக மாறிவரும் நிலையில் சமயம், ஆன்மீகம் முதலானவை பற்றி அறியாமல் பலர் தீய செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் மாணவர்களிடத்தே பல்வேறு விழுமியப் பண்புகளை மேன்படுத்த வேண்டியுள்ளது.

ஒரு நாட்டின் விதி அதன் வகுப்பறைகளிலேயே வடிவமைக்கப்படுகின்றது என்ற கல்வி ஆணைக்குழுவின் (1966) கூற்றுக்கமைய வகுப்பறைகளில் விழுமியக் கல்வி போதனைகளை திட்டமிட்டு நடார்த்த வேண்டிய தேவை இன்றைய நிலையில் எழுந்துள்ளது.

ஒரு பிள்ளை வளர்ந்து பூரண மனிதராவதற்கு அறிவு, உடல், உணர்வு, அன்பு, ஆத்மீகம் போன்றவற்றில் வளர்ச்சிகள் இடம் பெற வேண்டும். இவை முழுவதிலும் விழுமியம் தொடர்புபடுவதால் ஒழுக்கம்சார் விழுமியப் பண்புகளை மாணவர்களிடத்தே கற்பிக்க வேண்டிய தேவைப்பாடுள்ளது.

இன்றைய குழந்தைகளே நாளைய தலைவர்களாக இருப்பதனால் அவர்களின் நடத்தை சீரும் சிறப்புமாக இருந்தால்தான் எதிர்காலத்தில் நன்னடத்தை உள்ளவர்களாகவும் ஒளிமயமான உலகத்தை நோக்கி முன்னேறுபவர்களாகவும் வளர்ச்சியடைவர். அந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்துக்குட்பட்ட பாடசாலை மாணவரிடத்தே விழுமியப் பண்புகளை மேன்படுத்துவது அவசியமாகவுள்ளது.

இப்பருவத்தினரிடையே காணப்படும் தவறான பழக்கங்கள் வாழ்நாள் முழுவதும் பாதிப்பதாகவே அமைகின்றது. இதனால் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்களுக்கு விழுமியக் கல்வியின் அவசியத்தை புலப்படுத்தும் வகையில் இவ்வாய்வு முக்கியத்துவமுடையதாகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. மாணவர்கள் ஒழுக்கம் சார் விழுமியப் பண்புகளை எந்தளவிற்குக் கடைப்பிடித்து நடக்கின்றார்கள் எனக் கண்டறிதல்

2. மாணவர்கள் ஒழுக்கம் சார் விழுமியப் பண்புகளை கடைப்பிடித்து நடப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிதல்

3. விழுமியப் பண்புகளைக் கடைப்பிடித்து நடக்கும் மாணவர்களுக்கும், விழுமியப் பண்புகளைப் பின்பற்றாத மாணவர்களுக்கும், கற்றல் கற்பித்தலுக்கும் இடையேயுள்ள தொடர்பினைக் கண்டறிதல்

4. சிறந்த விழுமியப் பண்புகள் இல்லாத நிலையில் மாணவர்கள் எதிர் நோக்கும் சவால்களை எடுத்துக் காட்டுதல்

**இலக்கிய மீளாய்வு**

இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக ஆய்வுத் தலைப்புடன் தொடர்புபட்ட நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், வாழ்வியற் களஞ்சியங்கள், குறிப்புக்கள், சுற்றறிக்கைகள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் என அனைத்து வெளியீடுகளையும் தேடிக்கண்டு பிடித்து பல்வேறு தலைப்புக்களில் இலக்கிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
விழுமியக்கல்வி பற்றிய அறிமுகம், விழுமியக்கல்விக்கான விரைவிலக்கணங்கள், விழுமியக் கல்வியும் இன்றைய தேவையும், விழுமியக் கல்வியும் ஆசிரியர்களும், இணைபாட விதான செயற்பாடுகளினூடாக மனித விழுமியங்களைக் கற்பித்தல் போன்றவாறான பல்வேறு விடயங்கள் யாவும் சஞ்சிகைகள், அவை தொடர்பான நூல்களிலிருந்து பெறப்பட்டு இலக்கிய மீளாய்வுச் செயற்பாடு இடம் பெற்றுள்ளது.

விழுமியமானது தனியாளுக்கும், சூழலுக்குமிடையேயுள்ள தொடர்வைக் குறிப்பதாக அமைகின்றது. மாணவர்களுக்கு நல்லொழுக்கத் தீர்மானங்களை எடுப்பதற்கு அடிப்படையாக அமைவது அவரிடம் பதிந்துள்ள விழுமியங்களாகும். இதன்படி மனித விழுமியங்களாகக் கருதப்படுகின்ற சகிப்புத் தன்மை, இரக்கம், அனுதாபம், நேர்மை, நட்பு, புரிந்துணர்வு, நம்பிக்கை, மன்னித்தல், உதவும் மனப்பான்மை, நன்றி முதலியன சிறந்த ஒழுக்கங்களாக மாணவர் மத்தியில் வளர்க்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

விழுமியம் பற்றி தற்காலத்தில் அதிகமாகப் பேசப்பட்டு வருகின்றது. இன்றைய சமூக வாழ்வில் விழுமியம் அகன்றதன் காரணமாக தற்கொலை, வன்முறைகள், மோசடி, சிறிய பிரச்சினைகளுக்கு வேலை நிறுத்தம் என்றவாறாக தொடர்ந்து

கொண்டே போகின்றது. காரணம் விழுமியம் எம்மை விட்டு விலகியதாகும் இதனால் விழுமியத்தின் தேவை தற்காலத்தில் அதிகரித்துள்ளது. (வஸீல் எல், 2007).

மாணவர்களின் நடத்தை சீரும் சிறப்புமாக இருந்தால் தான் எதிர்காலத்தில் நன்னடத்தை உள்ளவர்களாகவும் ஒளிமயமான உலகத்தை நோக்கி முன்னேறுபவர்களாகவும் வளர்ச்சியடைவர். எனவே மாணவர்களின் பண்பாடு, விழுமியம் முதலான நற்திறன்களை வளர்ப்பது மிக அவசியமானதாகும். பாடசாலைப் பருவத்திலேயே பல நடத்தைகளையும் உலக அம்சங்களையும் செயற்பாடுகளையும் அறிபவர்களாகவும், கற்பவர்களாகவும் மாணவர்கள் காணப்படுகின்றனர். இந்நிலையில் மாணவர்கள் நன்நடத்தையுடையவர்களாகவும், கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் சிறந்து விளங்குவதற்கும் விழுமியங்களின் பங்களிப்பு அளவிட முடியாததாகும்.

இன்றைய நிலையில் மாணவர்கள் அறநெறிக் கருத்துக்களை அறியாதவர்களாகவும், கற்க ஆர்வமற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். சமயம், ஆன்மீகம் முதலானவை பற்றி அறியாததன் காரணமாக பல தீய செயல்களிலும் ஈடுபடுகின்றனர். அதே வேளை சில மாணவர்கள் கல்வி கற்றாலும் கற்ற விடயங்களை மறந்து தாம் போன போக்கில் நடப்பதை அவதானிக்கலாம். அன்று வள்ளுவர் கூறிய கற்கக் கசடற கற்பபை கற்றபின் நிற்க அதற்குத்தக எனும் கூற்றுக்கிணங்க மாணவர்கள் இன்று செயற்படுவது மிகக் குறைவே எனவே சமூகத்தில் நன்னடத்தையுடையவர்களாகவும் நற்குணங்களையுடையவர்களாகவும் வளர தாம் கற்றவை போல் அவர்கள் செயற்படுவதற்கு ஒழுக்கம்சார் விழுமியங்களே பங்களிப்புச் செய்கின்றன. இவ்வாறு மாணவர்கள் செயற்படுவதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை சிறப்பாகவும், சீராகவும் மேற்கொள்ள முடியும்.

மாணவர்கள் மத்தியில் ஒழுங்கான நடத்தைகளைத் தோற்றுவிக்கவும் செயற்படுத்தவும் விழுமியக் கல்வியும், ஒழுக்கம்சார் விழுமியங்களும் பங்களிப்புச் செய்கின்றன என்பதை நாம் அறியக் கூடியதாகவே உள்ளது. அமைதியான நிலையையும், நிம்மதியான மனதையும் அன்பு, கருணை, தூய்மை, சமத்துவம் என பல நல்லெண்ணங்களை உருவாக்கவும் விழுமியங்கள் மிகவும் உறுதுணையாகவுள்ளது. இதனால் மாணவர்கள் அமைதியாகக் கற்றுக் கொண்டு கற்றலில் சிறப்படைய முடியும். (சிவநடேஸ். செ, 2006)

இன்றைய நிலையில் மனங்களில் ஐக்கியப்பாடு, இயற்கை, அன்பு, கூட்டுறவு ஆகிய பண்புகளே கல்வியின் உயர் விழுமியங்களாக சமூகத்தில் ஏற்கப்படுகின்றன. இன்றைய நிலையில் பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் கற்பிப்பதற்குரிய நிறுவனங்கள் முதலியவை கல்விச் செயற்பாடுகளில் பங்கு வகிக்கின்றன. கல்வியின் மூலம் சமூக இணக்கப்பாடு, சமாதான உணர்வு, சகோதரத்துவம் போன்றவையும் முன்னெடுக்கப்படுவதை உலகலாவிய கல்வியின் நோக்கங்களாக கருதுகின்றனர். எனவே வித்தியா என்று போற்றப்படும் கல்வியின் உயர் பயன்பாட்டை யாவரும் பெறச் செய்வதே மேற்குறித்த கல்வி நிறுவனங்களின் இலட்சியங்களாக அமைதல் வரவேற்கத்தக்கதாகும். முதலாவதாக உலகியல் சார்ந்த கல்வி நிலையில் திறன்கள், ஆற்றல்கள் என்பனவற்றைக் கற்பித்தல் இரண்டாவது நிலையில் அறம், தெய்வீகம் புலக்கட்டுப்பாடு, கடவுள் பக்தி, சமூக இணக்கம் ஆகியவற்றைக் கொண்டதாக அமையும். (கோபாலகிருஷ்ண ஐயர், ப, 2003).

விழுமியப் பண்புகளுக்கும், விழுமியக் கல்விக்கும் கீழைத்தேய நாடுகளிற் மட்டுமல்லாது மேலைத்தேய நாடுகளிலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். விழுமியமானது நல்லொழுக்கத்தையும், நல்லெண்ணங்களையும் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக அமைகின்றது. ஒரு மனிதனிடம் நல்லொழுக்கமும், நல்லெண்ணங்களும் இல்லாவிட்டால் அவனது ஆற்றல் பலவீனப்படுத்தப்பட்டதாகவே உள்ளது.

## ஆய்வு முறைமையியல்

### ஆய்வு முறைமை

இந்த ஆய்வு முறையில் ஆய்வினை மேற்கொள்ள எவ்வாறு தகவல்கள் பெறப்பட்டன, மாதிரித்தெரிவு எவ்வாறு இடம் பெற்றது, ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள், என்பன தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இந்த வகையில் இவ்வாய்வு விபரண ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது மாணவர்களின் இயல்புகள், நடத்தை (Behaviour) போன்றவற்றை விளக்குவதற்கும் அதிலிருந்து முடிவுகளைப் பெற்றுக் கொளவதற்கும் இவ்வாய்வு முறை சிறப்பானதாகக் காணப்படுகின்றது.

அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்களிடமிருந்து பெற்ற தரவுகள், தகவல்கள் யாவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் தரவுப் பகுப்பாய்வு முறைகளாக அளவறிசார் முறையும், பண்பறிசார் முறையும் பயன்படுத்தப்பட்டாலும் அதிகளவாக பண்பறிசார் முறையே பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பகுப்பாய்வுக்கு உதவியாக கணனி மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டதன் மூலம் நேர்த்தியான நம்பகமான பகுப்பாய்வாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### ஆய்வின் குடித்தொகையும், மாதிரியும்.

ஆய்வுப் பிரதேசமானது 21 பாடசாலைகளைக் கொண்டுள்ள போதிலும் இடைநிலைப் பிரிவு வகுப்புக்களையுடைய 12 பாடசாலைகள் ஆய்வு மதிரியாகத் தெரிவு செய்யப்பட்டன.

**ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் வகையும் பௌதீக வளம் தொடர்பான விபரமும்**

| பாடசாலையின் பெயர் | பாடசாலையின் வகை | கிணறு | மைதானம் | மலசல கூடம் |
|---|---|---|---|---|
| 1.மட்/அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயம் | 1C | உண்டு | உண்டு | உண்டு |
| 2. மட்/கற்சேனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | II | உண்டு | இல்லை | உண்டு |
| 3. மட்/மாவடிமுன்மாரி தமிழ் கலவன் பாடசாலை | II | உண்டு | இல்லை | உண்டு |
| 4. மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் | 1C | உண்டு | உண்டு | உண்டு |
| 5. மட்/முதலைக்குடா மகா வித்தியாலயம் | 1AB | உண்டு | உண்டு | உண்டு |
| 6. மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் | II | உண்டு | உண்டு | உண்டு |
| 7. மட்/பண்டாரியாவெளி த.க.பாடசாலை | II | உண்டு | உண்டு | உண்டு |
| 8. மட்/அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம் | 1C | உண்டு | உண்டு | உண்டு |
| 9. மட்/கொக்கட்டிச்சோலை இ.மி.பாடசாலை | 1C | உண்டு | உண்டு | உண்டு |
| 10. மட்/கடுக்காமுனை வாணி வித்தியாலயம் | II | உண்டு | உண்டு | உண்டு |
| 11. மட்/நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலயம் | II | இல்லை | இல்லை | உண்டு |
| 12. மட்/கொல்லனுலை விவேகானந்தா வித்தியாலயம் | II | உண்டு | இல்லை | உண்டு |

அட்டவனை- 01 ஆதாரம்- (வலய கல்வி அலுவலகம், பட்டிருப்பு)

தெரிவு செய்யப்பட்ட 12 பாடசாலைகளும் ஆய்வுக் குடித்தொகையில் உட்படுவதுடன், 12 பாடசாலைகளின் அதிபர்கள், இப்பாடசாலைகளில் காணப்பட்ட 186 ஆசிரியர்களுள் எளிய எழுமாற்று மாதிரியின் படி 26 ஆசிரியர்களும், 138 மாணவர்களிடமிருந்து பெற்ற தரவுகளும், தகவல்களும் அளவறிசார் முறையும், பண்பறிசார் முறையும் பயன்படுத்தி. நேர்த்தியாகவும், நம்பகமாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டன.


**தரவு சேகரித்தல் கருவிகளும் நுட்பங்களும்**

ஓர் ஆய்வின் வெற்றியானது சேகரிக்கப்படும் தரவுகளின் வகை தரம் என்பவற்றில் தங்கியுள்ளன. இந்தவகையில்

1. வினாக் கொத்து
2. நேர் காணல்
3. கலந்துரையாடல்
4. அவதானம் ஆகிய கருவிகள் செப்பமாக வடிவமைக்கப்பட்டன.

**எண்ணக்கருவாக்கச் சட்டகம்**

ஆய்வாளனால் தயாரிக்கப்படும் எண்ணக்கருவாக்கச் சட்டமானது ஆய்வினை வழிநடத்திச் செல்ல உதவுகிறது.




**தரவுகளை முன்வைத்தலும் பகுப்பாய்வும்**

விழுமியக் கல்வியைக் கற்பிப்பதினூடாக மாணவர்களிடத்தே விழுமியப் பண்புகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறுபட்ட விடயங்கள் பல்வேறு வழிகளில் பெறப்பட்டன. அதன்படி அதிபர்களின் கருத்துகளினூடாக அறியப்பட்ட விடயங்களாவன பாடசாலைகளில் மாணவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து நடப்பதற்காக பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மாணவர்கள் விழுமியப் பண்புகளை கற்றுக் கொள்ளும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல்.

**அட்டவனை 4.1**

| | |
|---|---|
| ஆம் | 100% |
| இல்லை | 0% |

இந்தவகையில் கருத்தரங்குகள், வழிகாட்டல்கள், விழாக்கள் நிகழ்வுகளின் போது ஒழுக்கத்தைப் பேணும் வகையிலான நாடகங்கள், பேச்சு போன்றவாறான செயற்பாடுகள் இடம் பெறுவதாகவும் அதிபர்கள் இனங்காட்டியுள்ளனர்.

இதே போல் மாணவர்கள் ஒழுக்கம்சார் விழுமியப் பண்புகளைக் கடைப்பிடித்து நடக்கின்றார்களா? என வினவப்பட்டதற்கு 8% மாணவர்களே விழுமியப் பண்புகளைக் கடைப்பிடிப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.





**Fig 4.1**

இதே போல் ஆசிரியரளின் கருத்துக்களினூடாக அறியப்பட்ட விடயங்களாவன விழுமியப் பண்புகளை மாணவர்கள் கற்றுக் கொள்ளும் வகையிலான விடயங்கள் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக 77% ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.





**Fig 4.2**

இந்தவகையில் பிரதான பாடங்களான சமயம், தமிழ்மொழி போன்ற பாடப்பரப்புக்களிலும், விருப்பத் தெரிவு பாடங்களான குடியுரிமைக்கல்வி, நுண்கலை, சுகாதாரமும் உடற்கல்வியும் போன்ற பாடங்களில் ஏன் விழுமியப் பண்புகளை கடைப்பிடித்து நடக்க வேண்டும் போன்றவாறான விடயங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறே விழுமியப்பண்புகளைக் கடைப்பிடித்து நடப்பதில் மாணவர்களின் ஆர்வம் எவ்வாறுள்ளது? என வினவப்பட்டதற்கு மாணவர்களின் ஆர்வம் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுவதாக அறிய முடிந்துள்ளது.





**Fig 4.3**

இவ்வாறே விழுமியப் பண்புகளைக் கடைப்பிடித்து நடக்கும் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் சிறப்பாகச் செயற்படுவதாக 84% ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.





**Fig 4.4**

**முடிவுகளும் விதந்துரைப்புகளும்**
**ஆய்வின் மூலமான கண்டறிதல்கள்**

- ஒழுக்கம் விழுமியப் பண்புகளில் சிறந்து விளங்கும் மாணவர்களே கற்றல் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகின்றனர்.
- மாணவர் மத்தியில் குழப்ப நிலை, குழுச்சண்டைகள், பாடசாலைப் பொருட்களுக்கு சேதம் விளைவித்தல்

போன்றன அதிகரித்துக் காணப்படுவதோடு, சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல், பிறரை மதித்தல் என்பன மறைந்து செல்லும் அதேவேளை எதிர்ப்பு மனப்பாங்கு மேலோங்கிச் செல்கின்றது.

- மாணவர்களில் பலர் பொய் சொல்லுதல், களவெடுத்தல், அமைதியின்மை, நம்ப முடியாத தன்மை போன்ற அறநெறி சாரா நடத்தைப் பண்புகளைக் கொண்டிருத்தல்
- மற்ற மாணவர்களை குறை கூறுதல், புறங் கூறுதல் போன்ற பண்புகள் அதிகமாகவே காணப்படல்.
- பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாணவர்களிடத்தே சிறந்த விழுமியப் பண்பாடுகளை மேன்படுத்தல் சிறப்பான வழிமுறையென கண்டறியப்பட்டது.
- பிரதான பாட, இணைபாடச் செயற்பாடுகளினூடாக மனித விழுமியப் பண்புகளைப் பிரயோகிப்பதற்கான வழிமுறைகள் பாடசாலைச் சூழலுக்கேற்ப கண்டறியப்பட்டு முன்வைக்கப்பட்டன.

**கலந்துரையாடலும் ஆலோசனைகளும்**

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலை மாணவர்களுக்கு விழுமியத்தைக் கடைப்பிடிப்பதனால் சமூகத்தில் கிடைக்கும் நன்மதிப்பைத் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

நல்ல பண்புகள் ஒழுக்க விழுமியங்கள் போன்றன ஒருவரிடத்தில் இல்லாமல் போகும் சந்தர்ப்பத்தில் எவ்வாறான பிரச்சினைகளை எதிர் காலத்தில் சந்திக்க வேண்டி ஏற்படும் என்பதனையும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுதல் வேண்டும். அதாவது சமூகத்திலுள்ள பெரியவர்கள் தொடக்கம் தன்னைவிட சிறியவர்களாக இருப்பவர்கள் வரை எல்லோரும் இவ்வாறனவர்களை மதிக்காத தன்மை உருவாவதோடு, இவர்களின் கருத்துக்களை ஒரு பொருட்டாகவே கருதாத நிலை ஏற்படும்.

ஆசிரியர்கள் மட்டுமல்லாது பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் யாவரும் ஒழுக்கம் தொடர்பான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் வழங்குதல் அவசியம். இந்தவகையில் சிறந்த பழக்க வழக்கங்களை வலியுறுத்தல், ஒழுக்கம் தவறிய நடத்தையின் விளைவுகளை எடுத்துக் காட்டுதல்.

இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்தில் வேகமாக சென்று கொண்டிருந்தாலும் மாணவர்கள் ஒழுக்கம், விழுமியத்தின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொண்டு நல்ல மாணவர்களாகச் செயற்படல் அவசியமாகும். இதற்காக விழுமியத்தின் உன்னதத்தையும், மதிப்பையும் எடுத்துக் காட்டும் வகையிலான கலைநிகழ்ச்சிகள், போட்டி நிகழ்ச்சிகளை பாடசாலைகளில் நடத்தி மாணவர்களுக்கு விழுமியத்தின் இன்றியமையாமையைப் புலப்படுத்துதல்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வெற்றியடைவதற்கு மாணவர்கள் சிறந்த விழுமியப் பண்புகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.
இணைகலைத்திட்ட செயற்பாடுகள், மன்றங்கள், விழாக்களின் போது அதிகளவிலான நிகழ்ச்சிகளை விழுமியங்களோடு தொடர்புபட்டதாக நடத்துதல்.

**முடிவுரை**

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலை மாணவரிடத்தே வன்முறை, கொள்ளை, திருட்டு, பொய் சொல்லுதல் முதலான தீய செயல்கள் உருவாகியுள்ளதோடு, நெறிபிறழ்வான நடத்தைகள் இன்றும் தொடர்ந்த வண்ணமுள்ளமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாறான பழக்க வழக்கங்களை உடனடியாக மாற்றியமைப்பதென்பது ஆசிரியர்களுக்கு கடினமானதாகவுள்ளது. இதனால் பிள்ளைகளிடத்தே விழுமியத்தை விருத்தி செய்வது என்பது ஒவ்வொரு பெற்றோரையும் சார்ந்துள்ள நிலையில் இன்று பெற்றோரிடமிருந்து பிள்ளை பிரிக்கப்பட்டு மாஸ்லோவின் உளவியல் தேவைகள் கோட்பாட்டின் வழி ஐந்து படி நிலைகளிலும் உடலியல், அன்பு, காப்பு, சுயதிறனியல், சுயதிருப்தி என்பனவற்றில் பிள்ளைக்கு குறைவு ஏற்பட இன்றைய சூழல் வழிவகுக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு விழுமியம் சார்பான விடயங்களை மாணவர்கள் பிரதான பாடங்களினூடாக மாத்திரமல்லாது இணைபாடவிதான செயற்பாடுகள், புறவேலைகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளும் வகையில் பாடசாலைகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். ஒழுக்கம்சார் விழுமியப் பண்புகளில் சிறந்து விளங்கும் மாணவர்கள் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் சிறப்பாகச் செயற்படுவதோடு, கற்றல் கற்பித்தலின் வெற்றிக்கும் வழிசெய்கின்றது. சிறந்த விழுமியக் கல்வியை புகட்டுவதன் மூலம் மாணவரிடம் சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். சமத்துவம், அறிவியல் மனப்பான்மை, பிறர் உரிமைகளை மதித்தல் போன்ற சிறந்த விழுமியங்கள் இன்றைய கல்வியுலகிற்கு மிக அவசியமாகத் தேவையாயுள்ளன. ஆகவே பெற்றோர்கள், ஆசிரியர்கள் மட்டுமல்லாது மாணவர்களும் விழுமியக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து விழுமியப் பண்புகளை மதித்து அதன் படி நடந்து பிரதேசத்தை மட்டுமல்லாது நாட்டினையும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்பது ஆய்வாளனின் எதிர்பார்ப்பாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1) சந்திரசேகரம். சோ, 1995, ''புதிய நூற்றாண்டுக்கான கல்வி,'' யுனி ஆட், கொழும்பு.
2) கிருஷ்ணபிள்ளை. வி, 2001, ''வழிகாட்டலும் ஆலோசனையும்,'' ராஜகிரிய வெயியீடு
3) பரராஜசிங்கம் இராஜேஸ்வரன், நடராசா திருவாசகன், 2003, ''கல்வியியலாளன்,'' கல்வியியல் வெளியீட்டு நிலையம், யாழ்ப்பாணம்.
4) செல்வநாயகம். இ, ரவீந்திரன். ஆ, 2007, ''சீரிய சிந்தனைகள்,''
5) சிவநடேஸ். செ,2006, ''பாடசாலை அபிவிருத்தி,'' எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு.
6) பக்கீர் ஜ.ஃ.பார். ப. கா, ''மாணவரின் வகுப்பறை நடத்தை,'' குமரன் புத்தக இல்லம்.
7) இராசநாயகம்.ஜெ, ஜீன 2006, அகவிழி
8) வஸீல் எல், ஜீன் 2007, அகவிழி